[1986, மே 13

(இஇ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள்(தற்காலிகநிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கண்ட கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: —

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1986) பேரவையில்

** 1986-ம் ஆண்டு மே 10ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

1886 மே 13] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈஈ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

இந்தச் சமயத்தில் சட்ட முன்வடிவு பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இயங்கி வரும் உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், பிற ஊழியர்களுக்கும் உரிய பணிப்பாதுகாப்பு வழங்கவும் அப்பள்ளிகளின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் தமிழ்நாடுஅங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டம், 1973 இயற்றப்பட்டு 1–12–74 முதல் இந்த மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநில சட்டப் பிரிவு 26-ன் கீழ் கல்வி அல்லது பயிற்றுவிப்பு முறை அல்லது பிற விஷயம் ஆகியவற்றின் தொடர்பாக அரசால் இயற்றப்பட்ட அரசாணை ஒன்றின் விளைவாக தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையோ, அல்லது பிற ஊழியர்களையோ ஆட்குறைப்பு செய்ய நேரிட்டால் அந்த ஆசிரியர்களையும், பிற ஊழியர்களையும் வேறொரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ தேவைக்கேற்ப பணியில் அமர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரு தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் காரணமாக ஆட்குறைப்பு செய்யப்படும் ஆசிரியர்களோ அல்லது வேறு ஊழியர்களோ, வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் பணி புரிவதற்கு திட்டவட்டமான வழி வகைகள் இல்லை. எனவே ஒரு தனியார் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் விளைவாக ஆட் குறைப்புக்கு உட்படும் ஆசிரியர்களோ பிற ஊழியர்களோ வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் வேலை ஏற்பதற்கு மேற்படி சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட வேண்டும் எனவும், அப்படிப்பட்ட முறையில் அச்சட்ட பிரிவு 26, உரியபடி திருத்தப்

* 1986-ஆம் ஆண்டு மே 8ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.